

விழுப்புரம் அரசு மருத்துவமனையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் ஊடகவியலாளர்கள் சங்கம் சார்பில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமை வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் பி.சரவணன், சுகாதாரத்துறை அதிகாரிகள், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பா.ஸ்ரீவினோத், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அணி அமைப்பாளர் செல்வ.பிரேம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், கிருஷ்ணாபுரம் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் வடிப்பாலையினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார், ஒன்றியச் செயலாளர்கள் எம்.ஏ.சாகுல் அமீது, எஸ்.கே.எம்.தங்கராஜ், த.செழியன், சர்க்கரைத் துறை கூடுதல் இயக்குனர் பி.பாலமுருகன், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணைய மேலாண்மை இயக்குநர் டி.ரமணி தேவி, உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் (பொ) மோகனசுந்தரம், ஆலையின் செயலாட்சியர் யோகவிஷ்ணு, தலைமை பொறியாளர் சக்திவேல் ஆகியோர் உள்ளனர்.

### அமைச்சர்கள் கோவி.செழியன் - அன்பில் மகேஷ் பொய்யாமொழி - வி.செந்தில்பாலாஜி சிறப்புரை!

# கோவை மாநகர் மாவட்டத்தில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிக்கை!

கோவை, ஜன. 24 -

கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



நாளை (25.01.2025 சனிக்கிழமை) மாலை 5.30 மணி அளவில் சிங்காநல்லூர் கரும்புக்கடை மைதானத்தில், கோவை மாநகர், மாவட்ட தி.மு.க., மாநகர் மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில், மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தலைமையில், மாணவர் அணி அமைப்பாளர் வி.சிவப்பிரகாஷ் வரவேற்புரையில், மாவட்ட துணைச்செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், மாவட்டப் பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், சிங்காநல்லூர் பகுதி 2 கழகச் செயலாளர் சிங்கை மு.சிவா, மாநகர் மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.பாண்டி, ஆர்.நந்தகுமார், ஆர்.ஸ்ருதி பிரியா, கோவை ஜெகதீஷ், 61வது வார்டுச் செயலாளர் தென்னவர் செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், மாவட்டப் பொறுப்பு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, முனைவர் கணபதி ராஜ்குமார் எம்.பி., தலைமைக் கழகப் பேச்சாளர் நெல்லை ஜான், கழக சொத்துப் பாதுகாப்புக் குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, கோவை மாநகராட்சி மேயர் கே.ரங்கநாயகி, மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் வி.ஜி.கோகுல் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் தலைமைக்கழக நிர்வாகிகள் வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி, பி.நாச்சிமுத்து, வழக்கறிஞர் பி.ஆர்.அருள்மொழி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.எஸ்.பி.கண்ணப்பன், வே.பாலசுப்பிரமணியம், பி.ஆனந்தகுமார், பைந்தமிழ் பாரி, அ.தமிழ்மறை, எல்.பி.எப். சு.பார்த்தசாரதி, மு.இரா.செல்வராஜ், மருத்துவர் ஆர்.கோகுல், கிருபா சங்கர், நா.முருகவேல் அ.திராவிடமணி, விஷ்ணு பிரபு, எம்.வீரகோபால், மீனா ஜெயக்குமார் L.P.F., தமிழ்ச்செல்வன் L.P.F., கே.பெரியசாமி.

பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.எம்.சாமி, ஷேக் அப்துல்லா துரை.செந்தமிழ் செல்வன் மா.நாகராஜ், இரா.சேரலாதன் ஆர்.எம்.சேதுராமன், ப.பசுபதி, மார்க்கெட் எம்.மனோகரன், வி.ஐ.பதுருதீன், வ.ம.சண்முகசுந்தரம், கணபதி லோகு, அஞ்சுகம் எம்.பழனியப்பன், கே.எம்.ரவி, ஏ.எம்.கிருஷ்ணராஜு, பரணி கே.பாக்யராஜ் பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.மணிகண்டன், வெ.சசிக்குமார், ஜெ.நோயல் செல்வம், வெ.ந.உதயகுமார், மு.மா.ச.முருகன், மா.மகுடபதி, எஸ்.கே.ஆனந்தகுமார், ச.குப்புசாமி, தங்கம் (எ) சந்திரசேகரன், எஸ்.பி.சரஸ்வதி புஷ்பராஜ், ச.கார்த்திகேயன், கல்பனா ஆனந்தகுமார் (முன்னாள் மேயர்) மண்டலத் தலைவர்கள் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், மீனா லோகு, தெய்வானை தமிழ்மறை, வே.கதிர்வேல் நிலைக் குழுத் தலைவர்கள் தீபா தளபதி இளங்கோ, பெ.மாரிசெல்வன், சாந்தி முருகன், வி.பி.முபசீரா ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் பி.பைந்தமிழன் நன்றியுரை வழங்க உள்ளார்.

இக்கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர், கோவை மாநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், மேயர், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள், BLA2, பாக முகவர்கள், கழகத் தொண்டர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கழக துணைப் பொதுச் செயலாளர், கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ப.கலைச்செல்வி ஏற்பாட்டில் திருப்பூர் ராயபுரம் பகுதியில் அமைந்துள்ள காதர் பேட்டை மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் பயிலும் 250 குழந்தைகளுக்கு பள்ளிச் சீருடைகள் மற்றும் இனிப்புகளை திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் வழங்கினார். இதில் மாநகரச் செயலாளர்கள் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், கழக மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் மாலதி நாகராஜ், கழக மகளிர் அணி பிரசாரக் குழுச் செயலாளர் உமா மகேஸ்வரி, மாவட்ட துணைச் செயலாளர்கள் பொங்கலூர் ஒன்றியக் குழு முன்னாள் பெருந்தலைவர், வழக்கறிஞர் எஸ்.குமார், வழக்கறிஞர் சி.கே.நந்தினி, டிஜிட்டல் எஸ்.சேகர், பகுதிச் செயலாளர்கள் மியாமி ஆ.அய்யப்பன், மு.க.உசேன், மாமன்ற உறுப்பினர்கள் கல்விக்குழுத் தலைவர் பெ.திவாகரன், வெ.ராதாகிருஷ்ணன், தலைமைக் கழக பேச்சாளர்கள் ரஜினி செந்தில், மனோகர் பாபு உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக மகளிர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மாநகராட்சி 9 வது வார்டு வடக்கு 3 ஆம் வீதியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் வைக்கப்பட்ட மினி டேங்கை மாமன்ற உறுப்பினர் திருமதி செந்தாமரை பாலு முன்னிலையில், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் வட்டச் செயலாளர் ராமச்சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் பழனிவேலு, மதியழகன், பால்ராஜ், மாநகரக் கழக நிர்வாகிகள் ரெத்தினம், மணிவேலன், சேட் (எ) ஷாஜஹான், அறிவுடைநம்பி மற்றும் அழகு சீனிவாசன், அர்பன் ராஜேந்திரன், பாலு, தினேஷ் மற்றும் பலர் உள்ளனர்.

### ரூ.46.80 கோடி மதிப்பீட்டில்

# திருப்பூர் மாநகராட்சிக்குப் புதிய அலுவலகக் கட்டிடம்!

## தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டது!

சென்னை, ஜன. 24-

திருப்பூர் நகராட்சியானது 01.01.2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, பின்னர் 2 மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் 8 கிராம ஊராட்சிகளை இணைத்து 25.10.2011 முதல் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. திருப்பூர் மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 159.35 ச.கி.மீட்டராகும்.

2011ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி மக்கள் தொகை 8.77 இலட்சம் ஆகும். தற்போதைய மக்கள் தொகை 13.99 இலட்சமாகும். முதல் நிலை (A Grade) மாநகராட்சியாக உள்ள திருப்பூர் மாநகராட்சியானது 60 வார்டுகளை கொண்டுள்ளது.

தற்போது திருப்பூர் மாநகராட்சியுடன் இம்மாநகரையொட்டி அமைந்துள்ள கனியாம்பூண்டி மற்றும் நாச்சிபாளையம் ஆகிய ஊராட்சிகளையும் இணைத்து எல்லை விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, அதிகரித்து வரும் நிர்வாகத் தேவைகளை நிறைவு செய்யவும், பொதுமக்களுக்கான சேவைகளை மேம்படுத்தவும், போதிய வசதிகளுடன் திருப்பூர் மாநகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்டுவது அவசியமாக உள்ளது.

எனவே, திருப்பூர் மாநகரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு. கருணாநிதி பேருந்து நிலையம் எதிரில் வார்டு சி, பிளாக் எண். 31, நகரளவு எண். 2ல் உள்ள திருப்பூர் மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் 3.32 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடத்தில் இருக்கும் மருத்துவ துறை சார்ந்த பழைய கட்டிடங்களை அகற்றி, அவ்விடத்தில் ரூ.46.80 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாநகராட்சிக்கு புதிய அலுவலகம் கட்டும் பணிக்கு முதல்வர் அவர்களின் ஆணையின் பேரில் நிர்வாக அனுமதி வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இப்புதிய அலுவலகக் கட்டடம், மொத்தம் 96432 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் அலுவலகப் பகுதி, உயர் அலுவலர்களுக்கான காத்திருப்பு அறை, கழிப்பறை, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, மின்தூக்கிகள், சாய்வு தளங்கள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக அமையவுள்ளது.

பொதுமக்கள், அலுவலர்கள் என அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் திருப்பூர் மாநகராட்சியின் புதிய அலுவலகக் கட்டிடம் அமையும் என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



2026 – சட்டமன்றத் தேர்தல் முன்னிட்டு உதகை சட்டமன்ற தொகுதி உதகை நகர பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் பாக உறுப்பினர்கள் ஆய்வு கூட்டம் உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. இதில் நகர கழகச் செயலாளர் எஸ்.ஜார்ஜ் தலைமை வகித்தார். உதகை சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் தென்றல் செல்வராஜ் ஆய்வு நடத்தி பாக முகவர்களுக்கு மினிட் நோட்டு வழங்கி பாக நிலை முகவர்களை மாதம் ஒரு முறை கூட்டம் நடத்தி அதன் விவரங்களை தெரியபடுத்துமாறு ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளங்கோவன், மாவட்டப் பொருளாளர் நாசர் அலி, மாவட்ட துணை செயலாளர் அவினாஸ் கார்த்திக் மற்றும் பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2), பாக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.ராமச்சந்திரன்

**சனவரி 24 (2011)**



கழகம் துவங்கிய காலம் முதல் கழகப் பணியாற்றியவர்.

வடபெரும்பாக்கம் கிளைக் கழக அவைத் தலைவராக இருபது ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

சாலைப் பணியாளர்கள் சங்க கமிட்டி உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**